

# කාර්ය සාධන වාර්තාව

# செயலாற்றுகை அறிக்கை

# PERFORMANCE REPORT

# 2017

## භාණ්ඩාගාර මෙහෙයුම් දෙපාර්තමේන්තුව

## திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்

මුදල් හා ජනමාධ්‍ය අමාත්‍යාංශය
කොළඹ 01

நிதி மற்றும் வெகுசன ஊடக
அமைச்சு கொழும்பு 01

Ministry of Finance and Mass Media
Colombo 01

# உள்ளடக்கம்


| | | பக்க இல. |
|---|---|---|
| ➢ | தொலை நோக்கு | 01 |
| ➢ | எமது பணி | 01 |
| 1. | அறிமுகம் | 02 |
| 2. | முக்கிய தொழிற்பாடுகள் | 02 |
| 3. | நிறுவனக் கட்டமைப்பு | 03 |
| 4. | பதவியணி தொடர்பான தகவல்கள் | 04 |
| 5. | மனித வள அபிவிருத்தி | 05 |
| 6. | சுற்றறிக்கைகள் மற்றும் அறிவுறுத்தல்கள் | 08 |
| 7. | நிதிச் செயலாற்றுகை | 09 |
| 8. | பௌதிகச் செயலாற்றுகை | |
| | 8.1 காசு முகாமை | 11 |
| | 8.2 பொதுப் படுகடன் முகாமை | 14 |
| | 8.3 திறைசேரிச் செயற்பாட்டு திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ள வரியல்லா வருமானம் சேகரிப்பு | 22 |
| | 8.4 கடன் வழங்கல் | 24 |
| | 8.5 திறைசேரி உத்தரவாதங்கள் | 24 |
| | 8.6 திறைசேரி தனிக் கணக்கு முறைமையின் பயன்பாடு | 25 |
| | 8.7 ஆதனக் கடன் உத்தரவாதத் திட்டம் | 27 |
| | 8.8 திறைசேரி நிதி முகாமை முறைமை | 28 |

## ➢ தொலை நோக்கு

*“தென்னாசியப் பிராந்தியத்தில் மிகச் சிறந்த அரசாங்க நிதி முகாமையாளராகத் திகழ்தல்”*

## ➢ *எமது பணி*

*"திரட்டு நிதியத்திற்கும் ஏனைய திறைசேரி நிதியங்களுக்கும் சொந்தமான நிதிகளைக் கையாள்வதில் வினைத்திறனையும் சிக்கனத்தையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவதற்காகவும் வெளிநாட்டுக் கடன்பெறுகைகள் உள்ளிட்ட நிதிக் கணக்கீட்டுக்கு தலைமைத்துவம் வழங்கும் அதவேளை அரசாங்க செலவினங்களை அரசிறைத் திட்டங்கள் மற்றும் கடன்பெறுகை நிகழ்ச்சித்திட்டங்களுக்கு ஏற்ற வகையில் வரையறுப்பதற்காகவும் அர்ப்பணிப்புடன் செயறப்படுதல்".*


# *1. அறிமுகம்*

*திறைசேரித் தொழிற்பாடுகள் திணைக்களமானது திரட்டு நிதியம் (திறைசேரி காசுப் பாய்ச்சல்), பொதுப் படுகடன் என்பவற்றின் முகாமையுடன் தொடர்புடைய விடயங்களைக் கையாள்வதற்கான வினைத்திறன்மிக்க நிறுவனம் ஒன்றை உருவாக்கும் நோக்கில் 2004 ஜூலை 28 ஆந் திகதி தாபிக்கப்பட்டது. இந்நோக்கத்தை நிறைவேற்றும் முயற்சியாக, தேசிய வரவு செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்படும் மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினங்களை தொழிற்பாட்டு ரீதியான காசு உட்பாய்ச்சலாகவும் வெளிப்பாய்ச்சலாகவும் மாற்றுவதுடன் கடன்களூடாக நிதியிடப்பட வேண்டிய பற்றாக்குறைகளை அடையாளம் காணும் பணியை திறைசேரிச் செயற்பாட்டு திணைக்களம் மேற்கொள்கின்றது நிகழ்ச்சிகள். இத்திணைக்களத்தின் பொதுப் படுகடன் முகாமைத் தொழிற்பாட்டில் அரசாங்கத்தின் சார்பில் படுகடன் சேவை மற்றும் அறிக்கைப்படுத்தல் என்பனவும் உள்ளடங்கும்.*

# *2. முக்கிய தொழிற்பாடுகள்*

- *திறைசேரியின் காசுப் பாய்ச்சல் முகாமை*
- *கொடுப்பனவு முறைகளின் ஊடாக திறைசேரி நிதிகளைப் பகிர்ந்தளித்தல்.*
- *செலவீட்டு முகவரகங்களுக்கான நிதிகளை மதிப்பீடு செய்தல், முன்னுரிமைப்படுத்தல், விடுவித்தல்.*
- *திறைசேரி உத்தரவாதங்களை வழங்குதல்*
- *உபகடன் பெறுதல் மற்றும் மேற்பார்வை செய்தல் ஊடாக திறைசேரி புத்தகங்களில் ஆவணப்படுத்தல்.*
- *இத்திணைக்களத்திடம் ஒப்படைக்கபபட்டுள்ள 12 வரியல்லா வருமானத் தலைப்புக்களுக்கான மதிப்பீடு, சேகரிப்பு மற்றும் கணக்கீடு*
- *வெளிநாட்டு உதவிக் கடன்கள் மற்றும் நன்கொடைகளின் கீழான நிதிகளின் விடுவிப்புக்கான ஏற்பாடுகளைச் செய்தல்.*
- *வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்களின் கணக்கீட்டுக்கான வசதி ஏற்பாடுகளைச் செய்தல்.*
- *அரசாங்கத்தின் கடன்பெறுகைகள் மற்றும் படுகடன் சேவைகளுக்கான கணக்கீடு.*
- *அரசாங்கத்தின் வங்கிக் கணக்குகளுக்கும் கட்டுநிதிக் கணக்குகளுக்கும் அதிகாரமளித்தலும் அவற்றை மேற்பார்வை செய்தலும்.*
- *அரசாங்க உத்தியோகத்தர் உத்தரவாதத் திட்டத்தை இயக்குதல்.*

# 3. நிறுவனக் கட்டமைப்பு



# *4.* பதவியணி தொடர்பான தகவல்கள்

**அட்டவணை *4 .1* :** *ஊழியர் பலம் 2017.12.31 இல் உள்ளவாறு*

| பதவி | அனுமதிக்கப்பட்டஊழியர் தொகை | தற்போதுள்ள ஊழியர் தொகை |
|---|---|---|
| பணிப்பாளர் நாயகம் | *01* | *01* |
| மேலதிகப் பணிப்பாளர் நாயகம் | *03* | *01** |
| இ.க.சே - வகுப்பு *I* | *09* | *08* |
| இ.க.சே - வகுப்பு *II/III* | *10* | *08* |
| இ.நி.சே. - வகுப்பு *III* | *01* | - |
| நிர்வாக உத்தியோகத்தர் | *01* | *01* |
| அபிவிருத்தி உதவியாளர் | *20* | *17* |
| அரச முகாமைத்துவ உதவியாளர் - வகுப்பு *I/II/III* | *55* | *51* |
| தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பம் உதவியாளர் | *07* | *01* |
| சாரதிகள் | *08* | *08* |
| அலுவலக உதவியாளர் - வகுப்பு *I/II/III* | *12* | *12* |
| மொத்தம் | *127* | *108* |

* இ.க.சேவையின் வகுப்பு *I* உத்தியோகத்தர் ஒருவர் முழுநேர அடிப்படையில் மேலதிகப் பணிப்பாளர் நாயகம் பதவியில் பதில் கடைமையில் ஈடுபடுகின்றார்.

# *5. மனித வள அபிவிருத்தி*

*திணைக்கள ஊழியர்களின் அறிவு, திறன் மற்றும் மனப்பாங்குகளை மேம்படுத்துவதற்கான தொடர்ச்சியான முயற்சியின் ஒரு பகுதியாக, பல்வேறு ஆற்றல் விருத்தி நிகழ்ச்சி வாய்ப்புக்கள் வழங்கப்பட்டன. அவற்றின் விபரங்கள் கீழே அட்டவணையில் தரப்படுகின்றன.*

### *உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயிற்சி 2017*

***அட்டவணை 5.1 :*** *உள்நாட்டுப் பயிற்சிகள்*

| **ஊழியர் வகுதி** | **பயிற்சிநெறிகளின் எண்ணிக்கை** | **பயிற்சியளிக்கப்பட்ட உத்தியோகத்தரின் எண்ணிக்கை** | **பயிற்சித் துறை** | **நிறுவனம்/ அமைவிடம்** |
|---|---|---|---|---|
| *பதவிநிலை உத்தியோகத்தர்கள்* | *06* | *04* | *அரசாங்க பெறுகைகள், ஒப்பந்த நிர்வாக டிப்ளோமா* | *மிலோதா* |
| | | *01* | *விசுவல் ஸ்டூடியோ அறிமும் மற்றும் இற்றைப்படுத்தல்கள் தொடர்பான செயலமர்வு* | *மிலோதா* |
| | | *01* | *கனிஷ்ட நிறைவேற்று* | *மிலோதா* |
| | | *01* | *உத்தியோகத்தர்களுக்கான ஆங்கில டிப்ளோமா* | *மிலோதா* |
| | | *03* | *அரச துறையில் நிதிப் பிரமாணங்கள் ஆதன முகாமை* | *மிலோதா* |
| | | *01* | *பொது நிதி மற்றும் கணக்கீட்டுத் திறன்கள்* | *மிலோதா* |
| *அரச முகாமைத்துவ உதவியாளர்* | *05* | *01* | *முறையாக கடிதம் எழுதும் திறன்கள் கனிஷ்ட நிறைவேற்று* | *மிலோதா* |
| | | *01* | *உத்தியோகத்தர்களுக்கான ஆங்கில டிப்ளோமா* | *மிலோதா* |
| | | *04* | *கோவை முகாமை, பொது அலுவலக நிர்வாகம் மற்றும் தாபன விதிக் கோவை* | *மிலோதா* |
| | | *01* | *CIGAS* | *மிலோதா* |
| | | *01* | *சம்பளப் பட்டியல்* | *மிலோதா* |
| *அபிவிருத்தி உத்தியோகத்தர்* | *04* | *01* | *சம்பளப் பட்டியல் கனிஷ்ட நிறைவேற்று* | *மிலோதா* |
| | | *01* | *உத்தியோகத்தர்களுக்கான ஆங்கில டிப்ளோமா* | *மிலோதா* |
| | | *01* | *CIGAS* | *மிலோதா* |
| | | *01* | *அரச துறையில் நிதிப் பிரமாணங்கள்* | *மிலோதா* |
| *அலுவலக உதவியாளர் சேவை* | *01* | *01* | *ஒரு தரமான பணிச் சூழலை உருவாக்குவதற்காக அலுவலக ஊழியர் சேவையினருக்கு தொழில்சார் அபிவிருத்தி தொடர்பா பயிற்சி* | *மிலோதா* |
| *முழு அலுவலர்கள்* | *01* | *100* | *திணைக்கள அலுவலர்களுக்கான விழப்புணர்வு பயிற்சி* | *TOD* |

*மேற்குறித்தவற்றுக்கு மேலதிகமாக, ஊழியர்களின் மனப்பாங்கு மற்றும் திறன் விருத்திக்கான குறிக்கோளுடன் "விஜய ஹொலிடே ரிசோர்ட் - கிரியல்லை" இல் 2017 செப்டம்பர் 23 ஆந் திகதி ஒரு நாள் பயிற்சி நிகழ்ச்சியொன்று நடாத்தப்பட்டது. இப்பயிற்சிநெறியானது சுய முன்னேற்றத்திற்கும் திணைக்களத்தின் ஊழியர் குழாத்தின் அங்கத்தவர்களுக்கும் இடையேயான பரஸ்பர தொடர்புகளை விருத்திசெய்வதற்கும் உதவியாக அமைந்தது. இந்நிகழ்ச்சியில் திணைக்களத்தின் நூறு (100) ஊழியர்கள் ஊக்கத்துடன் பங்கேற்றனர்.*

***அட்டவணை 5.2*** *2017 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட வெளிநாட்டுப் பயிற்சிகள் மற்றும் பங்கேற்ற மாநாடுகள்*

| | **பயிற்சி/கருத்தரங்கு அல்லது மன்றம்** | **சேவை வகை** | **நாடு** | **காலப்பகுதி** | **உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை** |
|---|---|---|---|---|---|
| 1 | அரச துறை தலைமைத்துவம் மற்றும் தீர்மானம் எடுத்தல் தொடர்பான நிறைவேற்றுப் பயிற்சி நிகழ்ச்சி | பதவிநிலை உத்தியோகத்தர் | சிங்கப்பூர் | 23.01.2017 27.01.2017 | 01 |
| 2 | பேச்சுவார்த்தை மற்றும் முரண்பாட்டுகளுக்குத் தீர்வு காணல் தொடர்பான நிறைவேற்றுப் பயிற்சி நிகழ்ச்சி | பதவிநிலை உத்தியோகத்தர் | சிங்கப்பூர் | 20.02.2017 24.02.2017 | 01 |
| 3 | இலங்கை அரசாங்கத்தின் சர்வதேச நாணய முறிகள் விநியோகம் | பதவிநிலை உத்தியோகத்தர் | ஹொங் கொங் சிங்கப்பூர் USA | 08.03.2017 18.03.2017 | 02 |
| 4 | பொது கொள்கை வகுப்புச் செயன்முறையைப் பலப்படுத்துவது தொடர்பான பயிற்சி நிகழ்ச்சி | பதவிநிலை உத்தியோகத்தர் | அவுஸ்திரேலியா | 20.03.2017 24.03.2017 | 03 |
| 5 | அரசிறைப் பகுப்பாய்வு மற்றும் எதிர்வுகூறல் தொடர்பான பாடநெறி | பதவிநிலை உத்தியோகத்தர் | இந்தியா | 20.03.2017 31.03.2017 | 01 |
| 6 | அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்கான சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளின் ஆற்றல் விருத்தி தொடர்பான கருத்தரங்கு | பதவிநிலை உத்தியோகத்தர் | சீனா | 16.03.2017 05.04.2017 | 01 |
| 7 | ஆசிய பிராந்திய பொதுப் படுகடன் முகாமை மன்றம் | பதவிநிலை உத்தியோகத்தர் | கம்போடியா | 04.04.2017 06.04.2017 | 01 |
| 8 | நாணயக் கொள்கை தொடர்பான பாடநெறி | பதவிநிலை உத்தியோகத்தர் | இந்தியா | 16.04.2017 29.04.2017 | 01 |
| 9 | அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கான சேவை வர்த்தக தொடர்பான கருத்தரங்கு | பதவிநிலை உத்தியோகத்தர் | சீனா | 21.04.2017 11.05.2017 | 01 |
| 10 | தெற்காசிய நாடுகளுக்கான பொருளாதார ஒத்துழைப்பு தொடர்பான கருத்தரங்கு | பதவிநிலை உத்தியோகத்தர் | சீனா | 16.05.2017 25.05.2017 | 01 |
| 11 | பட்டுப்பாதை பொருளாதாரப் பட்டி நெடுகிலும் உள்ள நாடுகளுக்கான அல்கஹோல் விநியோக முகாமை மற்றும் ஊக்குவிப்பு தொடர்பான கருத்தரங்கு 2017 | அபிவிருத்தி உத்தியோகத்தர் | சீனா | 16.05.2017 05.06.2017 | 01 |
| 12 | பொது நிதி முகாமை | அபிவிருத்தி உத்தியோகத்தர் | இந்தியா | 05.06.2017 09.06.2017 | 01 |
| 13 | படுகடன் முகாமை மற்றும் அரசிறைப் பிரச்சினைகள் | பதவிநிலை உத்தியோகத்தர் | தாய்லாந்து | 19.06.2017 23.06.2017 | 01 |
| 14 | ஆசிய நாடுகளுக்கான சீனாவின் அபிவிருத்தி உதவிச் செயற்திட்டத்திற்கான நிதிச் சேவைகள் தொடர்பான கருத்தரங்கு 2017 | பதவிநிலை உத்தியோகத்தர் | சீனா | 16.08.2017 25.08.2017 | 02 |
| 15 | மூலதனச் சந்தைகள் மற்றும் முதலீட்டு வங்கித்தொழில் | அபிவிருத்தி உத்தியோகத்தர் | இந்தியா | 04.09.2017 13.09.2017 | 01 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 16 | நிதித் துறையைக் கண்காணித்தல் | அபிவிருத்தி உத்தியோகத்தர் | இந்தியா | 18.09.2017<br>26.09.2017 | 01 |
| 17 | அரசாங்க நிதி மற்றும் பொதுத் துறைப் படுகடன் புள்ளிவிபரங்கள் | பதவிநிலை உத்தியோகத்தர் | இந்தியா | 18.09.2017<br>22.09.2017 | 01 |
| 18 | ஆசியாவில் நிதியியல் அறிவைத் தீர்மானிக்கும் காரணிகள் மற்றும் தாக்கங்கள் தொடர்பான கொள்கை உரையாடல் | பதவிநிலை உத்தியோகத்தர் | பிலிப்பைன்ஸ் | 22.09.2017 | 01 |
| 19 | பயனுறுதி வாய்ந்த ஆட்சிமுறை மற்றும் நிலைபேறான அனைவரையும் உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சிக்கான பேரினப் பொருளாதார முகாமை | பதவிநிலை உத்தியோகத்தர் | அவுஸ்திரேலியா | 20.11.2017<br>15.12.2017 | 02 |
| 20 | முதலீட்டு முகாமை தொடர்பான ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிராந்திய மன்றும் | பதவிநிலை உத்தியோகத்தர் | சிங்கப்பூர் | 29.11.2017<br>30.11.2017 | 01 |

# 6. சுற்றறிக்கைகள் மற்றும் அறிவுறுத்தல்கள்

*அரசாங்கத்தின் நிதி முகாமையை மேம்படுத்தும் நோக்கில் இத்திணைக்களம் 2017 ஆம் ஆண்டில் பின்வரும் சுற்றறிக்கை அறிவுறுத்தல்களை வெளியிட்டது.*

**அட்டவணை 6.1**

| திகதி | சுற்றறிக்கை இல. | தலைப்பு |
|---|---|---|
| 23-05-2017 | 01/ 2017 | 2018 ஆம் ஆண்டுக்கான வருமான மதிப்பீடுகள் |
| 29-05-2017 | 02/ 2017 | வருமான நிலுவைகள் கூற்று -30/06/2017 |
| 22-09-2017 | 03/ 2017 | 2018 ஆம் ஆண்டுக்கான சம்பளங்கள், சம்பள முற்பணங்கள், ஓய்வூதியங்கள் என்பவற்றைச் செலுத்துதல் |
| 02-11-2017 | 04/ 2017 | 2017 ஆம் ஆண்டுக்கான காசேடுகளை முடிவுறுத்துதல் மற்றும் கட்டுநிதிக் கணக்குகளைத் தீர்த்தலும் |
| 28-11-2017 | 06/ 2017 | வருமான நிலுவைகள் கூற்று -31.12.2017 |
| 30-11-2017 | 05/ 2017 | 2018 ஆம் ஆண்டின் ஒதுக்கீட்டுச் சட்டத்தில் செய்யப்பட்டுள்ள வரவு செலவுத் திட்ட ஏற்பாடுகளின் கீழ் கொடுப்பனவுகளைச் செய்வதற்காக ஒவ்வொரு திணைக்களத்திற்குமான வருடாந்தம் கட்டுநிதி வரையறைகளைத் தீர்மானிப்பதற்கான தகவல் சேகரிப்பு |

# *7. நிதிச் செயலாற்றுகை - 2017*

***அட்டவணை 7.1***

*ரூபா '000*

| விடயம் | வகை/பொருள்/விடயம்/விபரம் | 2016 | | 2017 | | 2016 ஆம் ஆண்டின் உண்மைச் செலவினங்களின் அடிப்படையில் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பீடு | உண்மையான | மதிப்பீடு | உண்மையான | 2017 ஆம் ஆண்டின் செலவின அதிகரிப்பு (வீழ்ச்சி) | செலவின வேறுபாட்டு வீதம் (%) |
| | **மீளெழும் செலவுகள்** | ***1,120,500*** | ***1,048,233*** | ***963,736*** | ***926,838*** | ***(121,395)*** | ***(11.58)*** |
| | **தனியாள் வேதனாதிகள்** | ***67,650*** | ***64,704*** | ***75,650*** | ***67,104*** | ***2,400*** | ***3.71*** |
| *1001* | சம்பளங்கள் மற்றும் வேதனங்கள் | *33,200* | *32,878* | *41,000* | *38,593* | *5,715* | *17.38* |
| *1002* | மேலதிக நேர மற்றும் விடுமுறைக் கொடுப்பனவுகள் | *600* | *519* | *650* | *640* | *121* | *23.31* |
| *1003* | ஏனைய படிகள் | *33,850* | *31,307* | *34,000* | *27,871* | *(3,436)* | *(10.98)* |
| | **பிரயாணச் செலவுகள்** | ***1,615*** | ***1,606*** | ***3,330*** | ***3,089*** | ***1,483*** | ***92.34*** |
| *1101* | உள்நாட்டு | *115* | *109* | *130* | *129* | *20* | *18.35* |
| *1102* | வெளிநாட்டு | *1,500* | *1,497* | *3,200* | *2,960* | *1,463* | *97.73* |
| | **வழங்கல்கள்** | ***4,550*** | ***4,456*** | ***4,250*** | ***4,172*** | ***(284)*** | ***(6.37)*** |
| *1201* | எழுது பொருட்கள் மற்றும் அலுவலகத் தேவைகள் | *2,500* | *2,423* | *2,200* | *2,174* | *(249)* | *(10.28)* |
| *1202* | எரிபொருள் | *1,975* | *1,961* | *1,970* | *1,919* | *(42)* | *(2.14)* |
| *1203* | உணவு மற்றும் சீருடைகள் | *75* | *72* | *80* | *79* | *7* | *9.72* |
| | **பராமரிப்புச் செலவினம்** | ***2,323*** | ***1,802*** | ***3,220*** | ***2,285*** | ***483*** | ***26.80*** |
| *1301* | வாகனம் | *1,650* | *1,545* | *2,400* | *1,926* | *381* | *24.66* |
| *1302* | பொறி இயந்திரம் மற்றும் உபகரணங்கள் | *500* | *205* | *500* | *285* | *80* | *39.02* |
| *1303* | கட்டடங்கள் மற்றும் கட்டமைப்புக்கள் | *173* | *52* | *320* | *74* | *22* | *42.31* |
| | **சேவைகள்** | ***3,792*** | ***3,769*** | ***4,790*** | ***3,671*** | ***(98)*** | ***(2.60)*** |
| *1401* | போக்குவரத்து | *1,805* | *1,802* | *2,400* | *1,863* | *61* | *3.39* |
| *1402* | தபால் மற்றும் தொடர்பாடல் | *1,850* | *1,833* | *2,200* | *1,626* | *(207)* | *(11.29)* |
| *1409* | ஏனையவை | *137* | *134* | *190* | *182* | *48* | *35.82* |
| | **மாற்றல்கள்** | ***1,040,570*** | ***971,896*** | ***866,676*** | ***840,697*** | ***(131,199)*** | ***(13.50)*** |
| *1503-01* | லொத்தர் அபிவிருத்தி மானிய அளவீடுகளின் மீளளிப்பு | *539,420* | *470,992* | *365,676* | *339,747* | *(131,245)* | *(27.87)* |
| *1505-01* | அரசாங்க ஊழியர் காப்புறுதித் திட்டத்திற்கான அரசாங்கத்தின் பங்களிப்பு | *500,000* | *500,000* | *500,000* | *500,000* | - | - |
| *1506* | அரசாங்க ஊழியர்களின் சொத்துக் கடன்களுக்கான வட்டி | *1,150* | *904* | *1,000* | *950* | *46* | *5.09* |
| | **ஏனைய மீளெழும் செலவினங்கள்** | - | - | *5,820* | *5,820* | *5,820* | - |
| *1701* | நட்டங்கள் மற்றும் பதிவழிப்புக்கள் | - | - | *5,820* | *5,820* | *5,820* | - |

ரூபா '000

| விடயம் | வகை/பொருள்/விடயம்/விபரம் | 2016 | | 2017 | | 2016 ஆம் ஆண்டின் உண்மைச் செலவினங்களின் அடிப்படையில் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பீடு | உண்மையான | மதிப்பீடு | உண்மையான | 2017 ஆம் ஆண்டின் செலவின அதிகரிப்பு (வீழ்ச்சி) | செலவின வேறுபாட்டு வீதம் (%) |
| | **மூலதனச் செலவினம்** | ***9,140*** | ***8,929*** | ***9,500*** | ***3,598*** | ***(5,331)*** | ***(59.70)*** |
| | **மூலதன சொத்துக்களின் புனரமைப்பும் மேம்பாடும்** | ***1,700*** | ***1,521*** | ***2,700*** | ***1,456*** | ***(65)*** | ***(4.27)*** |
| *2001* | கட்டடப் புனரமைப்பும் மேம்பாடும் | *100* | *21* | *100* | *-* | *(21)* | *(100.00)* |
| *2002* | பொறி இயந்திரம் மற்றும் உபகரணங்கள் | *-* | *-* | *-* | *-* | *-* | *-* |
| *2002-1* | திறைசேரி தனிக் கணக்கு முறைமையின் அமுலாக்கம் | *1,000* | *981* | *1,500* | *981* | *-* | *-* |
| *2002-2* | ஏனையவை | *100* | *34* | *100* | *41* | *7* | *20.59* |
| *2003* | வாகனம் | *500* | *485* | *1,000* | *434* | *(51)* | *(10.52)* |
| | **மூலதனச் சொத்துக்களின் கையகப்படுத்தல்** | ***6,440*** | ***6,415*** | ***5,000*** | ***377*** | ***(6,038)*** | ***(94.12)*** |
| *2102* | தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | *6,440* | *6,415* | *5,000* | *377* | *(6,038)* | *(94.12)* |
| | **மனித வள அபிவிருத்தி** | ***1,000*** | ***993*** | ***1,800*** | ***1,765*** | ***772*** | ***77.74*** |
| *2401* | பயிற்சியும் திறன்விருத்தியும் | *1,000* | *993* | *1,800* | *1,765* | *772* | *77.74* |

# *8.* பௌதிகச் செயலாற்றுகை

## *8.1* காசு முகாமை

### *8.1.1* திறைசேரி காசுப் பாய்ச்சல் முகாமை

*அரசாங்கத்தின் கொள்கைகளையும் உபாயங்களையும் திட்டவட்டமாகத் வெளிப்படுத்தும் ஆவணமாக வருடாந்த வரவு செலவுத் திட்டம் விளங்குகின்றது. அது பொது மக்களுக்கான சேவைகளை வழங்குவதற்கான மீளெழும் தன்மை கொண்ட மற்றும் அரசாங்கத் கொள்கைகளையும் உபாயங்களையும் நடைமுறைப்படுத்துவதற்காக பொது முதலீடுகளுக்கான மூலதனத் தன்மை கொண்ட செலவீட்டு நிகழ்ச்சித் திட்டங்களுக்கான வளங்களை ஒதுக்குகின்றது. இப்பணியில், திறைசேரி தொழிற்பாட்டுத் திணைக்களமானது அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்கள் போன்ற ஒவ்வொரு செலவீட்டு முகவர் நிகழ்ச்சிக்குமான நிதிககள் காசு முகாமைச் செயன்றமுறையின் ஒரு பகுதியாக உரிய நேரத்தில் விடுவிக்கப்படுவதை உறுதிப்படுத்துகின்றது.*

*வரவுசெலவுத் திட்ட இலக்குகளை உரிய நேரங்களிலும் முன்னுரிமை அடிப்படையிலும் அடையப் பெறுவதற்காக, மீளாய்வாண்டில் திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களம் நிதிக்கான செலவுகளைக் குறைப்பதில் கவனம் செலுத்தி, அரசாங்கத்தின் காசுப் பாய்ச்சல் முகாமைச் செயற்பாடுகளை மேற்கொண்டது. இவ்வருடத்தில் முக்கியமான சில வருமானத் துறைகளின் வருமான கிடைக்காமையினாலும் சேகரிப்பு முறையில் ஏற்பட்ட சில ஏற்றத்தாழ்வுகளின் காரணமாகவும் வரவு செலவுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் முகவர்களின் நிதித் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் நடைமுறைச் சிரமங்களை திணைக்களம் எதிர்கொண்டது.*

*பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டவாறான 2016 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டம், முக்கியமான வருமானச் சேகரிப்பு முகவர்கள் மற்றும் செலவீட்டு முகவர்களிடமிருந்த சேகரிக்கப்பட்ட ஏனைய மாறுபடும் காரணிகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு, 2017 ஆம் ஆண்டுக்கான மதிப்பிடப்பட்ட காசுப் பாய்ச்சல் கூற்றுக்களை மாதாந்த விபரங்களுடன் திறைசேரிச் செயற்பாட்டு திணைக்களம் தயாரித்தது. பொருத்தமான முறையில் அரசாங்கத்திற்கு மிகக் குறைந்த செலவை ஏற்படுத்தும் விதத்தில் கடன்களைப் பெறுவதற்காக இத்தகவல்களை அடிப்படையாகக் கொண்டு மதிப்பிடப்பட்ட கடன்பெறுகை நிகழ்ச்சியும் தயாரிக்கப்பட்டது. மேலும், பொதுப் படுகடன் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி என்பவற்றின் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதன் மூலம், அரசாங்கத்தின் கடன்பெறுகைச் சாதனங்களின் விநியோகத்தின் வெளிப்படைத் தன்மையை மேம்படுத்துவதற்கான ஒரு நடவடிக்கையாக, இத்திணைக்களம் ஒரு முன்னோக்கிய காலாண்டுக்கான கடன்பெறுகை நாட்காட்டியைத் தயாரிக்க ஆரம்பித்தது.*

***அட்டவணை 8.1 :*** *அரசாங்க திறைசேரி காசுப் பாய்ச்சல் தொழிற்பாடுகள் 2017 -*

ரூபா பில்லியன்

| விபரங்கள் | *2016* | *2017* | |
|---|---|---|---|
| | **உண்மையான** | **மதிப்பீடு** | **உண்மையான** |
| ஜனவரி 01 ஆந் திகதியில் உள்ளவாறான ஆரம்பக் காசு மீதி | (196.8) | (160.3) | (160.3) |
| வருமானம் மற்றும் ஏனைய கிடைப்பனவுகள் மூலமான மொத்தக் காசு உட்பாய்ச்சல் | 1,616.2 | 1,911.4 | 1,765.3 |
| மீளெழும் கொடுப்பனவுகளுக்கான மொத்தக் காசு வெளிப்பாய்ச்சல் | (1,704.3) | (1,900.3) | (1,853.6) |
| மூலதனக் கொடுப்பனவுகளுக்கான மொத்தக் காசு வெளிப்பாய்ச்சல்* | (464.1) | (810.0) | (646.1) |
| தேசிய காசு மிகை/ (பற்றாக்குறை) | (552.2) | (798.9) | (734.4) |
| மொத்தக் கடன்பெறுகைகள்* | 1,318.1 | 1,614.7 | 1,564.5 |
| படுகடன் மீளளிப்பு | (741.5) | (815.8) | (868.9) |
| தேறிய கடன்பெறுகை | 576.6 | 798.9 | 695.6 |
| செம்மையாக்கல் கணக்கு மீதி (TEB, தேறிய வைப்புக்கள், போன்றவை) | 12.1 | - | 12.9 |
| டிசம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான முடிவுக் காசு மீதி | (160.3) | (160.3) | (186.2) |

***மூலம்***: *திறைசேரி தொழிற்பாட்டுத் திணைக்களம்*

*வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்- CS-DRMS அறிக்கை*

இவ்வருடத்தில் வருமானம் மற்றும் ஏனைய கிடைப்பனவுகள் மூலமான திறைசேரியின் காசு உட்பாய்ச்சல் 1,765.3 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட அதேவேளை, மீளெழும் மற்றும் மூலதனக் கொடுப்பனவுகளுக்கான வெளிப்பாய்ச்சல்களுக்குப் பின்னரான காசுப் பற்றாக்குறை 734.4 பில்லியன் ரூபாவாக் காணப்பட்டது. 2016 ஆம் ஆண்டின் இதே காலப் பகுதியுடன் ஒப்பிடுகையில் இது தேறிய காசுப் பற்றாக்குறையில் 182.2 பில்லியன் ரூபா அதிகரிப்பாகும். தேறிய காசுப் பற்றாக்குறையில் ஏற்பட்ட இந்த அதிகரிப்புக்குக் காரணம், 2016 ஆம் ஆண்டின் இதே காலப் பகுதியுடன் ஒப்பிடுகையில் 2017 ஆம் ஆண்டில் திறைசேரிக்கான காசு உட்பாய்ச்சலை விட 9 சதவீதம் அதிகரித்துக் காணப்பட்ட மூலதனச் செலவினங்களுக்கான வெளிப்பாய்ச்சல் 39 சதவீதத்தால் அதிகரித்தமையாகும். 2017 டிசம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான ஒட்டு மொத்த வங்கிக் காசு மீதி (பற்றாக்குறை), 2016 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 186.2 பில்லியன் ரூபாவாக அதிகரித்திருந்தது. படுகடன் மீளளிப்புக்களினதும் தொழிற்பாட்டு மற்றும் முதலீட்டுச் செலவுகளின் அதிகரிப்பே இதற்குப் பிரதான காரணமாகும்.

### *8.1.1.1 திறைசேரி காசு உட்பாய்ச்சல்*

*பொதுத் திறைசேரியின் 2017 ஆம் ஆண்டுக்கான காசு உட்பாய்ச்சல் 1765.3 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. வரியல்லா வருமானம், வரியல்லா வருமானம், வெளிநாட்டு கொடைகள் ஆகிய மூன்றுமே திறைசேரியின் காசு உட்பாய்ச்சலுக்கான பிரதான மூன்று மூலங்களாக உள்ளன. முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகையில் இந்தச் சேகரிப்பு 9 சதவீத அதிகரிப்பாகும். மொத்த வருமானச் சேகரிப்பு இவ்வருடத்தின் வருடாந்த மதிப்பிட்டில் 92 சதவீத மட்டத்தை அடைந்திருந்த அதேவேளை மொத்த வருமானத்தில் 93 சதவீதம் வரிகள் மூலம் சேகரிக்கப்பட்டது. 2013-2017 வரையான ஐந்த வருட காலத்திற்கான வரி வருமானச் சேகரிப்பு அட்டவணை 8.2 இல் காட்டப்பட்டுள்ளது. அது 920.2 பில்லியன் ரூபாவில் 1,645.3 பில்லியன் ரூபா வரை 79 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. 2015 ஆம் ஆண்டின் பின்னர் மொத்த வருமானத்திற்கான கொடைக் கிடைப்பனவுகள் தொடர்ச்சியாகக் குறைந்து வரும் போக்கைக் கொண்டுள்ளது. இதற்குப் பிரதான காரணம் இலங்கை நடுத்தர வருமானம் கொண்ட ஒரு நாடாகத் தரமுயர்த்தப்பட்டமையாகும். எவ்வாறாயினும், 2016 முதல் 2017 வரையான காலப்பகுதியில் நாடு பல்வேறு இயற்கை அனர்த்தங்களை எதிர்நோக்கியதனால் அனர்த்த நிவாரணங்கள் கிடைக்கப் பெற்றமையினால் கொடைகளின் கிடைப்பனவு அதிகரித்திருந்தது.*

***அட்டவணை: 8.2*** *2013-2017 காலப்பகுதிக்கான வருமான சேகரிப்பு* ரூபா பில்லியன்

| | *2013* | *2014* | *2015* | *2016* | *2017* |
|---|---|---|---|---|---|
| வரி வருமானம் | *920.2* | *987.7* | *1,270.1* | *1,446.4* | *1,645.3* |
| வரியல்லா வருமானம் | *102.4* | *97.2* | *63.0* | *168.3* | *117.4* |
| நன்கொடை | *2.3* | *2.5* | *1.5* | *1.5* | *2.5* |
| மொத்தம் | *1,024.9* | *1,087.5* | *1,334.6* | *1,616.2* | *1,765.3* |

### *8.1.1.2 திறைசேரி காசு வெளிப்பாய்ச்சல்கள்*

*அட்டவணை 8.3 இல் விளக்கப்பட்டுள்ள 2017 ஆம் ஆண்டின் மொத்தக் காசு வெளிப்பாய்ச்சலுக்கு இணங்க, 2016 ஆம் ஆண்டில் இதே காலப் பகுதியுடன் ஒப்பிடுகையில் பல்வேறு செலவீட்டு முகவர்களுக்கான மீளெழும் மற்றும் மூலதனச் செலவினங்களின் விடுவிப்புக்கள் முறையே 3.6 சதவீதத்தாலும் 17.1 சதவீதத்தாலும் அதிகரித்துள்ளது. மீளாய்வாண்டில் காசு வெளிப்பாய்ச்சலின் மொத்த உள்ளடக்கத்தைக் கவனத்தில் எடுக்கையில், மொத்த விடுவிப்புக்களில் 58 சதவீதம் அரச துறை சம்பளம் மற்றும் சமூர்த்தி, ஓய்வூதியம் மற்றும் சிறுநீரக நோயாளிகளுக்கான உதவி போன்ற சமூக நலனோம்பல் நிகழ்ச்சிகளுக்கான பங்களிப்பாக விடுவிக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க, அரசாங்கத்தின் பொது முதலீட்டுக்கான நிதி விடுவிப்புக்கள், 2015 முதல் 2016 வரையான காலப் பகுதியில் 3.7 சதவீதத்தாலும் 2016 முதல் 2017 வரையான காலப் பகுதியில் 17 சதவீதத்தாலும் அதிகரித்துள்ளன.*

***அட்டவணை: 8.3*** *காசு விடுவிப்புக்கள் - மூலதனம் மற்றும் மீளெழும்/ முகவர்களின் அடிப்படையில் - 2015 முதல் 2017*

ரூபா பில்லியன்

| நிறுவனம் | ***2015*** | | ***2016*** | | ***2017*** | |
|---|---|---|---|---|---|---|
| | **மீளெழும்** | **மூலதனம்** | **மீளெழு ம்** | **மூலதன ம்** | **மீளெழும்** | **மூலதனம்** |
| விசேட செலவீட்டு அலகுகள் | *10.15* | *1.74* | *7.20* | *2.64* | *9.25* | *3.27* |
| அமைச்சுக்கள் | *234.73* | *173.44* | *224.05* | *185.71* | *239.28* | *230.46* |
| திணைக்களம் | *579.30* | *71.97* | *594.81* | *64.49* | *611.69* | *80.96* |
| மாவட்ட செயலகங்கள் | *40.17* | *43.98* | *44.52* | *49.69* | *50.13* | *47.25* |
| மாகாண சபைகள் | *167.48* | *21.68* | *169.03* | *15.65* | *165.49* | *23.77* |
| பல்கலைக்கழகங்கள் | *26.75* | *9.55* | *29.13* | *21.96* | *31.07* | *17.47* |
| ஏனைய சபைகள் மற்றும் கூட்டுத்தாபனங்கள் | *21.06* | *19.46* | *23.33* | *14.28* | *24.42* | *11.79* |
| | *1,079.64* | *341.82* | *1,092.07* | *354.42* | *1,131.33* | *414.97* |

## *8.2* பொதுப் படுகடன் முகாமை

### ***8.2.1 அரசாங்கத்தின் கடன்பெறுகை நிகழ்ச்சித் திட்டம்- 2017***

*2017 வரவு செலவுத் திட்டத்தின் கீழ் வள இடைவெளிக்கு நிதியீட்டம் செய்வதற்காக 2016 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழ் கடன்பெறுகை வரையறையாக 1,579 பில்லியன் ரூபாவுக்கு பாராளுமன்றம் அனுமதி வழங்கியது. அதைத் தொடர்ந்து 2017 ஆம் ஆண்டுக்கான கடன்பெறுகை வரையறை 2017 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்தச்) சட்டத்தின் மூலம் 1,629 பில்லியன் ரூபாவாக அதிகரிக்கப்பட்டது.*

*இவ்வருடத்தில் பதிவாகிய உண்மையான கடன்பெறுகை 1,620 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. இதில் உள்நாட்டு மூலங்கங்களிலிருந்து பெறப்பட்ட 1,018 பில்லியன் ரூபாவும் வெளிநாட்டு மூலங்களிலிருந்து பெறப்பட்ட 601 பில்லியன் ரூபாவும் அடங்கும்.வெளிநாட்டு மூலங்களிலிருந்து பெறப்பட்ட கடன்பெறுகைகளில் வெளிநாட்டுச் சந்தையில் விநியோகிக்கப்பட்ட 228 பில்லியன் ரூபா பெறுமதியான சர்வதேச நாணய முறிகள், 153 பில்லியன் ரூபா வெளிநாட்டு நிதி நிபந்தனைக் கடன்கள், அபிவிருத்திக் கொள்கை, செயற்திட்ட மற்றும் நிகழ்ச்சித்திட்டக்கடன் 220 பில்லியன் ரூபா என்பன உள்ளடங்கும். 2017 ஆம் ஆண்டின் மொத்தக் கடன்பெறுகை 1620 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. இது 2016 ஆம் ஆண்டின் 1,519 பில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் 6.6 சதவீத அதிகரிப்பாகும்.*

*உண்மையான மொத்த உள்நாட்டுக் கடன்பெறுகைகள் 2016 ஆம் ஆண்டின் 945 பில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் 2017 ஆம் ஆண்டில் 7.7 சதவீதத்தால் அதிகரித்து 1,018 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. சாதகமான சந்தை நிலைமைகளையும் மத்திய வங்கியின் முற்பண அதிகரிப்பையும் வங்கி மேலதிகப்பற்று காலத்துக் காலம் பயன்படுத்துவதன் மூலம் வெளிநாட்டு நாணய நிதியீட்டத் தேவைகளுக்கான வசதிகளைச் செய்து கொடுப்பதற்காக இலங்கை அபிவிருத்தி முறிகளை விநியோகிப்பதில் இது பிரதான பங்கு வகித்தது.*

**அட்டவணை 8.4** அரசாங்க கடன்பெறுகை வரையறைகள் மற்றும் பயன்பாடு — ரூபா பில்லியன்

| விடயம் | 2016 | | 2017 | |
|---|---|---|---|---|
| | **அனுமதிக்கப்பட்ட வரையறை** | **பயன்பாடு** | **அனுமதிக்கப்பட்ட வரையறை** | **பயன்பாடு** |
| **மொத்தக் கடன்பெறுகைகள்** | ***1,699.00*** | ***1,519.48*** | ***1,629.00*** | ***1,619.62*** |
| உள்நாட்டு | *1,180.00* | *945.24* | *1,179.00* | *1,018.32* |
| வெளிநாட்டு | *519.00* | *574.24* | *450.00* | *601.30* |
| **மொத்த நிதியீட்டம்** | ***1,699.00*** | ***1,519.48*** | ***1,629.00*** | ***1,619.62*** |


***மூலங்கள்***: *திறைசேரி தொழிற்பாட்டுத் திணைக்களம்*

## *8.2.2* உள்நாட்டு நிதியீட்டம்

### *8.2.2.1* தேறிய உள்நாட்டு நிதியீட்டம் *(NDF)*

*வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறைக்கு நிதியீட்டம் செய்வதற்காக 2017 ஆம் ஆண்டில் உள்நாட்டு மூலங்களிலிருந்து பெறப்பட்ட கடன்கள் 18 சதவீதத்தால் அதிகரித்து 294 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. 2017 ஆம் ஆண்டில் பற்றாக்குறைக்கு நிதியீட்டம் செய்வதற்காக சந்தைப்படுத்தக்கூடிய படுகடன் சாதனங்கள் மூலம் பெறப்பட்ட மொத்தத் தேறிய கடன்பெறுகை 81 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட அதேவேளை சந்தைப்படுத்த முடியாத படுகடன் மீளளிப்புக்கள் 213 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. 2017 ஆம் ஆண்டில், சந்தைப்படுத்தக்கூடிய படுகடன் சாதனங்களின் ஊடாக தேறிய உள்நாட்டு நிதியீட்டத்திற்கான பங்களிப்பு 81 பில்லியன் ரூபாவாகக் காணப்படுகின்றமையானது, 2016 ஆம் ஆண்டின் 328 பில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்களவில் குறைந்துள்ளது.*

**அட்டவணை 8.3** தேறிய உள்நாட்டு நிதியீட்ட போக்கு




*இவ்வருடத்தில் திறைசேரி உண்டியல்கள் மூலமான கடன் பெறுகைகளில் தேறிய வெளிப்பாய்ச்சல் 82 பில்லியன் ரூபாவாவக் காணப்பட்டது. திறைசேரி உண்டியல்கள் குறுங்கால உண்டியல்களிலிருந்து நடுத்தக் காலச் சாதங்களாகவும் நீண்ட காலச் சாதனங்களாகவும் மாற்றப்பட்டதனால் திறைசேரி உண்டியல்களின் விநியோகத்தை விட மீளளிப்புக்கள் அதிகரித்துக் காணப்பட்டமையே இதற்குக் காரணமாகும்.*

அட்டவணை 8.5: அரசாங்க வரவு செலவுத் திட்டத்திற்கான தேறிய உள்நாட்டு நிதியீட்டம் 2016 மற்றும்2017

| விடயம் | தொகை (ரூபா பில்லியன் | | மொத்தத்தின் சதவீதமாக | |
|---|---|---|---|---|
| | 2016 | 2017 | 2016 | 2017 |
| **வகையின் அடிப்படையில்** | **248.4** | **294.3** | **100.0** | **100.0** |
| சாதனங்கள் மூலமான கடன்பெறுகைகள் | 327.8 | 80.8 | 132.0 | 27.4 |
| திறைசேரி முறிகள்* | 349.8 | 109.1 | 140.8 | 37.1 |
| திறைசேரி உண்டியல்கள்* | 98.5 | -81.7 | 39.6 | -27.8 |
| ரூபாக் கடன்கள் | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| இலங்கை அபிவிருத்தி முறிகள் | -120.5 | 53.3 | -48.5 | 18.1 |
| சாதனமல்லாக் கடன்பெறுகை | -79.4 | 213.5 | -32.0 | 72.6 |
| மத்திய வங்கியிடமிருந்து பெறப்பட்ட தற்காலிக முற்பணங்கள் | -67.8 | 116.5 | -27.3 | 39.6 |
| ஏனையவை(அ) | -11.5 | 97.0 | -4.6 | 33.0 |
| **முதிர்ச்சியின் அடிப்படையில்** | **248.4** | **294.3** | **100.0** | **100.0** |
| நடுத்தரக் காலம் முதல் நீண்ட காலம் வரை | 229.3 | 162.4 | 92.3 | 55.2 |
| திறைசேரி முறிகள்* | 349.8 | 109.1 | 140.8 | 37.1 |
| ரூபாக் கடன்கள் | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| இலங்கை அபிவிருத்தி முறிகள் | -120.5 | 53.3 | -48.5 | 18.1 |
| குறுங்காலம் | 19.1 | 131.8 | 7.7 | 44.8 |
| திறைசேரி உண்டியல்கள்* | 98.5 | -81.7 | 39.6 | -27.8 |
| மத்திய வங்கியிடமிருந்து பெறப்பட்ட தற்காலிக முற்பணங்கள் | -67.8 | 116.5 | -27.3 | 39.6 |
| ஏனையவை(a) | -11.5 | 97.0 | -4.6 | 33.0 |
| **சந்தைப்படுத்தக்கூடிய தன்மையின் அடிப்படையில்** | **248.4** | **294.3** | **100.0** | **100.0** |
| சந்தைப்படுத்தக்கூடியவை | 327.8 | 80.8 | 132.0 | 27.4 |
| திறைசேரி உண்டியல்கள்* | 98.5 | -81.7 | 39.6 | -27.8 |
| திறைசேரி முறிகள்* | 349.8 | 109.1 | 140.8 | 37.1 |
| இலங்கை அபிவிருத்தி முறிகள் | -120.5 | 53.3 | -48.5 | 18.1 |
| சந்தைப்படுத்த முடியாதவை(அ) | -79.4 | 213.5 | -32.0 | 72.6 |
| **உரிமையின் அடிப்படையில்** | **248.4** | **294.3** | **100.0** | **100.0** |
| வங்கிகள் | 139.9 | 187.7 | 56.3 | 63.8 |
| மத்திய வங்கி | 183.0 | -187.9 | 73.7 | -63.9 |
| வர்த்தக வங்கிகள் | -43.1 | 375.7 | -17.4 | 127.7 |
| வங்கியல்லாத் துறை(அ) | 108.5 | 106.5 | 43.7 | 36.2 |

மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி

* வதியாதோரின் முதலீடுகள் நீங்கலாக


(அ) 44,676.98 மில்லியன் ரூபா முதலீட்டு நீக்க வருமானமும் உள்ளடங்கும்

### *8.2.2.2 நிலுவையாகவுள்ள உள்நாட்டுப் படுகடன்*

*2017 ஆம் ஆண்டின் இறுதி வரையிலான உள்நாட்டுப் படுகடன், திறைசேரி முறிகள், திறைசேரி உண்டியல்கள், இலங்கை அபிவிருத்தி முறிகள் என்பன முறையே 68.3 சதவீதத்தையும், 12.5 சதவீதத்தையும் 11.4 சதவீதத்தையும் கொண்டிருந்தன. மீதமுள்ள பகுதி, இலங்கை மத்திய வங்கியிடமிருந்து பெறப்பட்ட தற்காலிகமாக முற்பணங்கள் (3.6 சதவீதம்), ரூபாக் கடன்கள் (0.4 சதவீதம்) ஏனைய கடன்கள் (3.8 சதவீதம்) என்பவற்றின் மூலம் பெறப்பட்டிருந்தது. முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகையில் திறைசேரி முறிகளின் இருப்புக்கள் 2.0 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. அதிக செலவுள்ள குறுகிய கால கடன்பெறுகளை விட நீண்ட நிதியீட்டத்தை நோக்கி திரும்புவதில் அரசாங்கம் கவனம் செலுத்தியமையினால் 2016 ஆம் ஆண்டின் இறுதியில் 14.6 சதவீதமாகக் காணப்பட்ட திறைசேரி உண்டியல்களின் பங்கு 2017 ஆம் ஆண்டின் இறுதியில் 12.5 சதவீதமாகக் குறைந்துள்ளது. முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகையில் நிலுவையாகவுள்ள இலங்கை அபிவிருத்தி முறிகள் 0.7சதவீதத்தால் அதிகரித்தது. 2016 ஆம் ஆண்டில் 1.6 சதவீதமாகக் காணப்பட்ட இலங்கை மத்திய வங்கியிடமிருந்து பெறப்பட்ட தற்காலிக முற்பணங்களின் பங்கு 2017 ஆம் ஆண்டில 3.6 சதவீதமாக அதிகரித்தது. இது பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட ஒதுக்கீட்டுச் சட்டத்தின் மூலம் மதிப்பிடப்பட்ட வருமானத்தின் அதிகரிப்பையும் அரசாங்கத்திற்கான பூச்சியச் செலவைக் கொண்ட நிதியீட்ட அதிகரிப்பையும் காட்டுகின்றது.*

### *8.2.2.3 உள்நாட்டுப் படுகடன்களின் முதிர்வுக் கட்டமைப்பு*

*உள்நாட்டுப் படுகடன்களின் முதிர்வுக் கட்டமைப்பு 2017 ஆம் ஆண்டின் இறுதியில் நிலுவையாகவிருந்த மொத்தப் படுகடன்களின் 18 சதவீதமாகக் காணப்பட்டது. அதனை 2018 ஆம் ஆண்டில் குறுங்காலப் பகுதியில் செலுத்த வேண்டியுள்ளது. மீதமுள்ள 82 சதவீதமும் நடுத்தர மற்றும் நீண்ட காலப் படுகடன்களாகக் கருதப்படுகின்றன. அவை 2018 ஆம் ஆண்டுக்குப் பின்னர் முதிர்ச்சியடையவுள்ளன. நடுத்தரக் காலம் முதல் நீண்ட காலம் வரையான மொத்தப் படுகடன் பங்கில் 84 சதவீத திறைசேரி முறிகள் உள்ளன. மீதமுள்ள 16 சதவீதத்தில், 14 சதவீதம் இலங்கை அபிவிருத்தி முறிகளாகவும், 0.4 சதவீதம் ரூபாக் கடன்களாகவும், 1.6 சதவீத ஏனைய கடன்பெறுகைகள் மூலமாகவும் பெறப்பட்டுள்ளன.*




### *8.2.2.4 உள்நாட்டுப் படுகடன் சேவைக் கொடுப்பனவுகள்*

*அரசாங்கத்தின் படுகடன் சேவைக் கொடுப்பனவுகள், 2016 ஆம் ஆண்டில் பதிவாகிய 1,106 பில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் 2017 ஆம் ஆண்டில் 13 சதவீதத்தால் அதிகரித்து 1,245 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. மொத்தப் படுகடன் சேவைக் கொடுப்பனவில் மீளகொடுப்பனவு 648 பில்லியன் ரூபாவாக (52 சதவீதமாக) காணப்பட்ட அதேவேளை மீதி 597 பில்லியன் ரூபா (48 சதவீதம்) வட்டிக் கொடுப்பனவாகக் காணப்பட்டது. முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகையில் 2017 ஆம் ஆண்டில் உள்நாட்டுப் படுகடன்களுக்கான மீளளிப்புக் கொடுப்பனவுகள் மற்றும் வட்டிக் கொடுப்பனவுகள் முறையே 52 பில்லியன் ரூபாவினாலும் 87 பில்லியன் ரூபாவினாலும் அதிகரித்தது.*

***அட்டவணை 8.6*** உள்நாட்டுப் படுகடன் சேவைக் கொடுப்பனவுகள்

*ரூபா பில்லியன்*

| வருடம் | மூலதனக் கொடுப்பனவுகள் | வட்டிக் கொடுப்பனவுகள் | மொத்தம் |
|---|---|---|---|
| *2016* | *596.43* | *509.82* | *1,106.25* |
| *2017* | *648.13* | *597.02* | *1,245.15* |

***மூலங்கள்***: *திறைசேரித் தொழிற்பாடுகள் திணைக்களம், அரசாங்க கணக்குகள் திணைக்களம்*

### *8.2.3* வெளிநாட்டு நிதியீட்டம்

*வெளிநாட்டு நிதியீட்டமானது வரவுசெலவுத் திட்டத்தின் பற்றாக்குறை நிதியீட்டத்திற்கான ஒரு மூலம் என்ற வகையில் ஒரு முக்கியமான வகிபாகத்தை ஆற்றுகின்றது. அது பொருளாதாரத்தின் இலக்காகக் கொள்ளப்பட்ட வளர்ச்சிக்கு உதவுவதற்குத் தேவையான முதலீட்டு மட்டங்களைப் பூர்த்திசெய்வதற்காக உள்நாட்டுச் சேமிப்பு முதலீட்டு இடைவெளிக்கான பாலமாகத் தொழிற்படுகின்றது. வெளிநாட்டு நிதியீட்டமானது பிரதானமாக வெளிநாட்டுக் கடன்கள் மற்றும் வெளிநாட்டுக் கொடைகள் என்ற இரு வகைகளில் கிடைக்கப் பெற்றன. அதற்கிணங்க, இவ்வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டு நிதியீட்டத்தில் 601.3 பில்லியன் ரூபா வெளிநாட்டுக் கடன்களும் 8.0 பில்லியன் வெளிநாட்டுக் கொடைகளும் அடங்கும். முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகையில், வெளிநாட்டுக் கடன்களும் கொடைகளும் 2017 ஆம் ஆண்டில் முறையே 4.7 சதவீதத்தாலும் 7.1 சதவீதத்தாலும் அதிகரித்துள்ளன.*

#### *8.2.3.1* வெளிநாட்டுக் கடன்கள்


*மொத்த வெளிநாட்டுக் கடன்கள் 2017 ஆம் ஆண்டிலும் 228 பில்லியன் ரூபா சர்வதேச நாணய முறிகளையும், 153 பில்லியன் ரூபா வெளிநாட்டு நியதி நிதியீட்ட வசதியையும் (FCTFF) 220 பில்லியன் ரூபா அபிவிருத்திக் கொள்கைச் செயற்திட்ட மற்றும் நிகழ்ச்சித்திட்டக் கடன்களையும் கொண்டிருந்தது.ஏனைய நடுத்தரக் காலம் முதல் நீண்ட காலம் வரையான நிதியீட்டச் சாதனங்களுடன் ஒப்பிடுகையில் வெளிநாட்டு நியதி நிதியீட்ட வசதியின் சாதகமான கடன் நிபந்தனைகளின் காரணமாக வெளிநாட்டு நியதி நிதியீட்ட வசதிக் கடன்களின் முக்கியத்துவம் அதிகரித்துள்ளது.*

***அட்டவணை 8.7*** *: வெளிநாட்டுக் கடன்பெறுகைகளின் உள்ளடக்கம் 2013-2017 சாதனங்களின் அடிப்படையில்*

*ரூபா பில்லியன்*

| **கடன் மூலம்** | ***2013*** | ***2014*** | ***2015*** | ***2016*** | ***2017*** |
|---|---|---|---|---|---|
| சர்வதேச நாணய முறிகள் | - | *195.2* | *298.5* | *217.9* | *228.5* |
| நியதிக் கடன் நிதியீட்ட வசதி | - | - | - | *101.8* | *152.7* |
| அபி. கொள்கைச் செயற்திட்ட மற்றும் நிகழ்ச்சித்திட்டக் கடன்கள் | *183.3* | *227.3* | *257.9* | *254.5* | *220.1* |
| **மொத்தம்** | ***183.3*** | ***422.5*** | ***556.4*** | ***574.2*** | ***601.3*** |

**வரைபு 8.3 வெளிநாட்டு கடன்**





### *8.2.3.1.1* வெளிநாட்டுப் படுகடன் சேவைக் கொடுப்பனவுகள்

*2016 ஆம் ஆண்டில் 246.2 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட மொத்த அரசாங்க வெளிநாட்டுப் படுகடன் சேவைக் கொடுப்பனவுகள் 2017 ஆம் ஆண்டில் 45 சதவீதத்தால் அதிகரித்து 357.8 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. மொத்த வெளிநாட்டுப் படுகடன் சேவைக் கொடுப்பனவில் மூலதன மீளகொடுப்பனவு 219.3 பில்லியன் ரூபாவாக காணப்பட்ட அதேவேளை மீதி 138.5 பில்லியன் ரூபா வட்டிக் கொடுப்பனவாகக் காணப்பட்டது. முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகையில் 2017 ஆம் ஆண்டில் வெளிநாட்டுப் படுகடன்களின் மூலதன மீள்கொடுப்பனவுகள் மற்றும் வட்டிக் கொடுப்பனவுகள் முறையே 74.2 பில்லியன் ரூபாவினாலும் 37.4 பில்லியன் ரூபாவினாலும் அதிகரித்துள்ளன.*

***அட்டவணை 8.8 :*** *வெளிநாட்டுப் படுகடன் சேவைக் கொடுப்பனவுகள் 2013 – 2017*

*ரூபா பில்லியன்*

| வருடம் | அசல் தொகை மீளளிப்பு | வட்டிக் கொடுப்பனவுகள் | மொத்தம் |
|---|---|---|---|
| *2013* | *94.9* | *63.0* | *157.9* |
| *2014* | *107.0* | *69.9* | *176.9* |
| *2015* | *187.1* | *77.2* | *264.3* |
| *2016* | *145.1* | *101.1* | *246.2* |
| *2017* | *219.3* | *138.5* | *357.8* |




***மூலங்கள்:*** *நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் நிதிக் கூற்றுக்கள்*

### *8.2.3.1.2 நிலுவையாகவுள்ள வெளிநாட்டுப் படுகடன் கையிருப்பு*

*நிலுவையாகவுள்ள மொத்த வெளிநாட்டுப் படுகடன்களின் கையிருப்பு 2017 ஆம் ஆண்டின் இறுதியில் 4,356.3 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. இது 2016 ஆம் ஆண்டின் 3,780.7 பில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் 575.6 பில்லியன் ரூபா அதிகரிப்பாகும். 2017 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறான பெரும்பாலான வெளிநாட்டுப் படுகடன் கையிருப்புக்கள், செயற்திட்ட மற்றும் நிகழ்ச்சித் திட்டக் கடன்களை உள்ளடக்கியிருந்தது.*

***அட்டவணை 8.9 :*** *2013 -2017 காலப்பகுதியில் நிலுவையாகவிருந்த வெளிநாட்டுப் படுகடன் கையிருப்பு*

*ரூபா பில்லியன்*

| *வருடம்* | *2013* | *2014* | *2015* | *2016* | *2017* |
|---|---|---|---|---|---|
| *நிலுவையாகவுள்ள படுகடன் கையிருப்பு* | *2,491.1* | *2,615.0* | *3,200.4* | *3,780.7* | *4,356.3* |

***மூலங்கள்:*** *நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் நிதிக் கூற்றுக்கள்*

### *8.2.3.1.3 வெளிநாட்டுக் கொடைகள்*

*பல்தரப்பு மற்றும் இரு தரப்பு மூலங்களிலிருந்தும் அபிவிருத்திப் பங்காளர்களிடமிருந்தும் கிடைக்கப்பெற்ற வெளிநாட்டு உதவிகள், மீளாய்வாண்டிலும் தொடர்ச்சியாகக் கிடைக்கப்பெற்றன. இவ்வருடத்தில் திறைசேரிக்குக் கிடைத்த மொத்த வெளிநாட்டு கொடைகள் 2017 ஆம் ஆண்டில் 7.1 சதவீதத்தால் அதிகரித்து 8.0 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது.*

*அட்டவணை 8.10 : 2013-2017 காலப் பகுதியில் பதிவாகிய வெளிநாட்டு நன்கொடைகள்*

*ரூபா பில்லியன்*

| வருடம் | **2013** | **2014** | **2015** | **2016** | **2017** |
|---|---|---|---|---|---|
| பதிவாகிய மொத்த வெளிநாட்டு கொடைகள் | 15.90 | 9.40 | 6.01 | 7.50 | 8.03 |

## 8.3. திறைசேரிச் செயற்பாட்டு திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ள வரியல்லா வருமானம் சேகரிப்பு

*திறைசேரிச் செயற்பாடுகள் பணிப்பாளர் நாயகம், வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் என்ற வகையில் 12 செலவுத் தலைப்புக்களை மேற்பார்வை செய்கின்றார். திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்தின் கீழ் உள்ள இந்த 12 வருமானத் தலைப்புக்களில் இரண்டு வருமானத் தலைப்புக்கள் துணைக் கடன்களின் மீளச் செலுத்தல்கள் மற்றும வட்டி சேகரிப்புக்கள் என்பவற்றுக்குப் பொறுப்பாக உருவாக்கப்பட்டுள்ள அதேவேளை ஏனைய இரண்டு வருமானத் தலைப்புக்கள் வெளிநாட்டுக் கொடைகளுக்காகவும் திறைசேரி முறிகளின் பிரிமியம் தொகைகளுக்ககாகவும் ஒதுக்கப்பட்டுள்ளன. மீதி 8 வருமானத் தலைப்புக்களும் ஒரு தனியான திணைக்களத்துக்கு அல்லது அமைச்சுக்கு நேரடியாக ஒதுக்கப்பட முடியாத வருமானங்களைச் சேகரிப்பதற்கான தலைப்புக்களாகும். பின்வரும் 10 வரியல்லா வருமானத் தலைப்புக்களின் கீழ் 47.1 பில்லியன் ரூபாவை வரியல்லா வருமானமாக இத்திணைக்களம் சேகரித்தது. இது மீளாய்வாண்டுக்கான மொத்த வரியல்லா வருமான மதிப்பீடான 180.3 பில்லியன் ரூபாவின் 26.1 சதவீதமாகும்.*

***அட்டவணை 8.11:-***

*திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களம்/ பணிப்பாளர் நாயகத்தினால் சேகரிக்கப்பட்ட வரியல்லா வருமானம் - 2016 - 2017*

| | | | | |
|---|---|---|---|---|
| | *(ரூபா.மில்லியன்)* | | | |
| | *2016* | | *2017* | |
| வருமான விபரம் | வருமான மதிப்பீடு | சேகரிக்கப்பட்ட வருமானம் | வருமான மதிப்பீடு | சேகரிக்கப்பட்ட வருமானம் |
| வரியல்லா வருமானம் | | | | |
| ஏனைய வாடகைகள் | *250.0* | *7,188.0* | *278.0* | *358.7* |
| கடன் வழங்கல் வட்டி | *4,250.0* | *3,954.0* | *4,300.0* | *4,648.6* |
| ஏனைய வட்டி | *1,000.0* | *872.3* | *1,650.0* | *2,746.8* |
| திணைக்கள விற்பனைகள் | *120.0* | *139.0* | *110.0* | *120.7* |
| நானாவிதமானவை | *6,000.0* | *16,073.6* | *5,000.0* | *6,143.4* |
| தண்டங்கள் மற்றும் பறிமுதல்கள் - ஏனையவை | *1,000.0* | *1,967.7* | *2,600.0* | *1,507.0* |
| ஏனைய பெறுகைகள் | *10,000.0* | *16,824.3* | *11,000.0* | *12,894.8* |
| ஏனைய நடைமுறை மாற்றல்கள் | *2,000.0* | *2,230.9* | *1,750.0* | *12,078.8* |
| மூலதனச் சொத்துக்களின் விற்பனை | *300.0* | *407.2* | *100.0* | *144.1* |
| துணைக் கடன் மீள் அறவீடு | *14,000.0* | *18,619.4* | *16,250.0* | *16,418.1* |
| வரியல்லா வருமானம் உப மொத்தம் | *38,920.0* | *68,276.4* | *43,038.0* | *47,061.0* |

*இவை தவிர 2017 ஆம் ஆண்டில் 10 வரியல்லா வருமானத் தலைப்புக்களில், வெளிநாட்டுக் கொடைகளின் கீழ் இத்திணைக்களத்தினால் 8.0 பில்லியன் ரூபாவைச் சேகரிக்க முடிந்ததுடன் திறைசேரி முறிகளின் பிரிமியங்களின் கிழ் 7.2 மில்லியன் ரூபா பதிவாகியது. அந்த வகையில், மீளாய்வாண்டில் இத்திணைக்களம் 12 வருமானத் தலைப்புக்களின் மூலம் 55.1 பில்லியன் ரூபாவை வருமானமாகச் சேகரித்துள்ளது.*

## *8.4 கடன் வழங்கல்*

*அரசாங்கம், நாட்டின் அபிவிருத்திச் செயன்முறைக்கான அத்தியவசியமான உட்கட்டமைப்புக்களை மேம்படுத்துவதற்குச் செயலூக்கமிக்க பங்களிப்பை வழங்கும் பொதுத் தொழில்முயற்சிகளுக்கு துணைக் கடன்களை வழங்குகின்றது. இந்த துணைக் கடன்களின் மூலதன அறவீடு மற்றும் வட்டி ஆகியவற்றை உள்ளடக்கிய தவணைக் கொடுப்பனவுகளைச் சேகரிப்பதிலும் இத்திணைக்களம் ஈடுபட்டுள்ளது. இந்நோக்கத்திற்காக திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களம் இற்றைப்படுத்தப்பட்ட மாதாந்த தரவுத் தளமொன்றைப் பேணி வருகின்றது.*

*இத்திணைக்களம் 20.3 பில்லியன் ரூபாவை புதிய துணைக் கடன்களாக விடுவித்ததுடன் பொதுத் தொழில்முயற்சிகளிடமிருந்து 16.4 பில்லியன் ரூபா துணைக் கடன் தவணைப் பணத்தை சேகரித்தது. அத்துடன் துணைக் கடன்களுக்கான வட்டி வருமானமாக ரூபா 4.6 பில்லியன் அறவிடப்பட்டது.*


*2017 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறான மொத்தத் துணைக் கடன்களின் மீதி 181.4 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. அது பொதுத் தொழில்முயற்சிகள், வர்த்தக வங்கிகள், அபிவிருத்தி வங்கிகள்ள, பிரதேச அபிவிருத்தி வங்கிகள் உள்ளிட்ட 50 கடன்பெறுகை நிறுவனங்களை உள்ளடக்கியிருந்தது. உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, சர்வதேச ஒத்துழைப்புக்கான ஜப்பானிய முகவரகம் என்பன போன்ற பாரிய கொடை வழங்குநர்களிடமிருந்த சலுகை அடிப்படையில் கிடைக்கப்பெறும் பிரதான கடன்களைப் பயன்படுத்தி இந்தத் துணைக் கடன்கள் வழங்கப்படுகின்றன.*

## *8.5 திறைசேரி உத்தரவாதங்கள்*

*பொதுத் தொழில்முயற்சிகள் 2003 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க அரசிறை முகாமை (ப்பொறுப்புச்) சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு உட்பட்ட வகையில் நிதி நிறுவனங்களிடமிருந்து உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கடன்களைப் பெறுவதற்கு கடன் உத்தரவாதங்களைச் சமர்ப்பிக்குமாறு அத்தொழில்முயற்சிகளிடம் கோரப்படுகின்ற போது திறைசேரித் தொழிற்பாடுகள் திணைக்களம் அத்தொழில்முயற்சிகளுக்கு திறைசேரி உத்தரவாதங்களையும் நாணய உத்தரவாதங்களையும் வழங்குகின்றது.*

*2017 ஆம் ஆண்டின் இறுதி வரையில் திறைசேரிச் செயற்பாட்டு திணைக்களம் 889.45 பில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உத்தரவாதங்களையும் நாணய உத்தரவாதங்களையும் வழங்கியிருந்தது. அவற்றில் 43.36 சதவீதமான உத்தரவாதங்கள் மின்சக்தி மற்றும் எரிசக்தித் துறைக்கு வழங்கப்பட்டுள்ளது.*

***வரைபு 8.5*** *திறைசேரி உத்தரவாதங்களின் துறைவாரியான உள்ளடக்கம் - 2017*




## *8.6 திறைசேரி தனிக் கணக்கு முறைமையின் பயன்பாடு*

*அரசாங்க அமைச்சுக்களினதும் திணைக்களங்களினதும் பயனுறுதி வாய்ந்ததும் வினைத்திறன்மிக்கதுமான நிதி முகாமைக்கு பொருத்தமான வங்கி முறைமையொன்று காணப்படுவது அவசியமாகும். நாட்டிலுள்ள வங்கி முறைமையை வலையமைப்பொன்றின் மூலம் இணைத்ததன் ஊடாக அரச நிதிகளைப் பயனுறுதி வாய்ந்ததும் வினைத்திறன்மிக்கதுமான முறையில் பயன்படுத்தும் நோக்கில், 2007 ஆண்டிலிருந்து திறைசேரி தனிக் கணக்கு முறைமையொன்றைத் திறைசேரி அறிமுகப்படுத்தியது.*

*TSA இன் கீழ் திறைசேரியின் பிரதிச் செயலாளரின் பெயரில் உள்ள 2017.12.31 இல் உள்ளவாறான உத்தியோகபூர்வ வங்கிக் கணக்குகளின் எண்ணிக்கை 2,187 ஆகக் காணப்பட்டது. அந்தக் கணக்குகளின் வங்கிகளின் அடிப்படையிலான பரம்பலைப் பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.*


***அட்டவணை 8.12*** *திறைசேரி தனிக் கணக்கு முறைமையின் கீழுள்ள உத்தியோகபூர்வ வங்கிக் கணக்குகள்*

| | இலங்கை வங்கி | மக்கள் வங்கி | இலங்கை மத்திய வங்கி | மொத்தம் |
|---|---|---|---|---|
| திறைசேரி தனிக் கணக்கு முறைமையின் கீழுள்ள உத்தியோகபூர்வ வங்கிக் கணக்குகள் | *1,450* | *705* | *0* | *2,155* |
| திறைசேரியின் பிரதிச் செயலாளரின் பெயரில் பேணி வரப்படும் பிரதான உத்தியோகபூர்வ வங்கிக் கணக்குகள் | *1* | *1* | *7* | *9* |
| திறைசேரி தனிக் கணக்கு முறைமைக்கு வெளியே உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் பேணி வரப்படும் சேகரிப்புக் கணக்குகள் | *17* | *6* | *0* | *23* |
| மொத்தம் | *1,468* | *712* | *7* | *2,187* |

*திறைசேரி தனிக் கணக்கு முறைமையை அறிமுகம் செய்ததன் ஊடாக வங்கிகளுடனான நிதிக் கொடுக்கல் வாங்கல்களை பயனுறுதி வாய்ந்த முறையில் சிக்கனமாக முகாமை செய்ததன் மூலம் திறைசேரியின் பிரதிச் செயலாளரின் பிரதான கணக்குகள் மீதான வங்கி மேலதிகப்பற்றுக்களையும் அவற்றுக்கான செலவுகளையும் குறைக்க முடிந்தது. அதனால், திறைசேரி தனிக் கணக்கு முறைமை நாடு முழுவதிலும் உள்ள அரசாங் வங்கிக் கணக்குகளில் காசு மீதிகள் பயன்படுத்தப்படாதிருப்பதைத் தவிர்க்க முடிந்துள்ளது.*

*2017 ஆம் ஆண்டில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அமைச்சுகள், திணைக்களங்கள், மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்கள் என்பற்றிலுள்ள அரசாங்கத்தின் கணக்குகளிலுள்ள நாளாந்தச் சராசரிக் காசு மீதி அண்ணளவாக 48.82 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. திறைசேரி தனிக் கணக்கு முறைமையின் ஊடாகத் திறைசேரியின் பிரதிச் செயலாளரின் பிரதான கணக்குகளுக்குத் இந்த கணக்கு மீதிகளைத் தற்காலிகமாகப் பயன்படுத்தக்கூடியதாக இருப்பதனால் ரூபா 4.97 பில்லியன் ரூபா வட்டிச் செலவினம் சேமிக்கப்பட்டது. திறைசேரி தனிக் கணக்கு முறைமை இல்லாதவிடத்து மேலதிகப்பற்றுக்கான மொத்த வட்டிச் செலவு 41.04 சதவீதத்தால் அதிகரித்திருக்கும். இந்நிலைமையைப் பின்வரும் வரைபு விலக்குகின்றது.*

**வரைபு 8.6** *தனிக் கணக்கு முறைமையின் செயலாற்றுகை - 2017*




## *8.7 ஆதனக் கடன் உத்தரவாத திட்டம்*

*ஒவ்வொரு அரசாங்க ஊழியருக்கும் வீட்டு ஆதனம் போன்ற பெறுமதியான சொத்தொன்றை பெற்றுக் கொள்வதற்கான வசதி ஏற்பாட்டைச் செய்து கொடுக்கும் நோக்கில் 2005 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் வங்கி முறைமையின் ஊடாக அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான புதிய கடன் திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. கடன் உத்தரவாத நிதியமானது கடன்பெற்றவர்களின் மரணம் அல்லது நிரந்தர அங்கவீனத்தின் காரணமாக வங்கிகளுக்கு ஏற்படக்கூடிய இழப்புச் சாத்தியங்களைத் தணிக்கும் நோக்கில் திறைசேரித் தொழிற்பாடுகள் திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழ் தாபிக்கப்பட்டது.*

*இந்த வகையில் திறைசேரி முறிகளை விதை மூலதனமாக விநியோகிப்பதன் மூலம் இந்நிதியம் 916 மில்லியன் ரூபா ஆரம்ப முதலீட்டுடன் 2005.08.05 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டது. இந்த முதலீடு 2017.12.31 ஆந் திகதி வரையில் 1,250 மில்லியன் ரூபா வரையில் முன்னேற்றகரமாக அதிகரித்துள்ளது.*

*அட்டவணை 8.13* ஆதனக் கடன் உத்தரவாத நிதியத்தின் மூலம் செய்யப்பட்ட தீர்ப்பனவுகளின் முன்னேற்றம் 2005 - 2017

| வருடம் | 2005 - 2015 | 2016 | 2017 | மொத்தம் |
|---|---|---|---|---|
| மரணித்த உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை | 411 | 98 | 72 | 581 |
| நிரந்தரமாக அங்கவீனமுற்ற மற்றும் மருத்துவக் காரணங்களுக்காக ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை | 28 | 08 | 06 | 42 |
| மொத்தத் தீர்ப்பவனவு ரூபா. மில் | 333 | 90.5 | 59 | 482.5 |

மேலே தரப்பட்டுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ளது போன்று, மரணித்த/ நிரந்தரமாக அங்கவீனமுற்ற/மருத்துவக் காரணங்களுக்காக ஓய்வுபெற்ற 623 அரசாங்க உத்தியோகத்தர்களின் கடன் மீதியான 482.5 மில்லியன் ரூபா உரிய அரசாங்க வங்கிகளுக்குச் செலுத்தப்பட்டதன் காரணமாக அவர்கள் பயனடைந்தனர். பயனுறுதி வாய்ந்ததும் வினைத்திறன்மிக்கதுமான நிதிய முகாமையின் ஊடாக அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்படும் வசதிகளை மேம்படுத்த வேண்டும் என்பதே திணைக்களத்தின் அவாவாகும்.

## 8.8 திறைசேரி நிதி முகாமை முறைமை(TFMS)

நிதி முகாமைத் தகவல்களுக்கான தேவைகளைப் பூர்த்தி செய்து முறைமையின் பயனர்-நட்புறவுத் தன்மையை உறுதிப்படுத்தும் நோக்கில் 2008 ஆம் ஆண்டில் திறைசேரி நிதி முகாமை முறைமை (TFMS) அறிமுகப்படுத்தப்பட்டது. இம்முறைமையின் வினைத்திறனை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட தொடர்ச்சியான முகாமைத்துவ மீளாய்வுகளின் விளைவாக, இம்முறைமையின் தொழில்நுட்ப மற்றும் ஏனைய பராமரிப்புக்கும் மேம்பாட்டுக்கும் பொறுப்பாகவுள்ள வாடிக்கையாளர் நிறுவனத்தினால் 2017 ஆம் ஆண்டில் இம்முறைமை மேலும் மேம்படுத்தப்பட்டது. இந்த முறைமையினுள் முகாமைத்துவ அறிக்கைகளை தயார்படுத்தக்கூடியதாக உள்ளமை திணைக்களத்தினால் அன்றாடம் எடுக்கப்படும் முக்கியமான முகாமைத்துவத்

தீர்மானங்களுக்குப் பெரிதும் உதவியாக அமைந்துள்ளது. இம்முறைமையானது திரட்டு நிதியத்தின் பெறுகைகள் மற்றும் கொடுப்பனவுகள் உள்ளிட்ட அனைத்துக் கொடுக்கல் வாங்கல்களையும் மேற்கொள்வதற்கான வசதிகளைக் கொண்டுள்ளதுடன் நாள் முடிவுக் காசு நிலைமை அறிக்கையையும் முகாமைத்துவத்தின் மதிப்பீட்டு வழங்குகின்றது. இந்த முறைமையின் ஊடாகத் தயாரிக்கப்படும் தகவல்கள் பயனுறுதி வாய்ந்த தீர்மானம் எடுத்தலுக்கான ஒரு முகாமைத்துவக் கருவியாக உயர் முகாமைத்துவத்தினால் பயன்படுத்தப்படுகின்றது.

2017 ஆம் ஆண்டில் திறைசேரிச் செயற்பாட்டு திணைக்களம் மொத்தமாக ரூபா 5036.7 பில்லியன் ரூபாவைப் பெறுகையாகப் பெற்றதுடன் மொத்தக் கொடுப்பனவு ரூபா 5018.2 பில்லியனாகப் பதிவாகியது. மொத்தப் பெறுகையான 5,036.7 பில்லியனில் 99.24 சதவீதம் (4998.0 பில்லியன்) திறைசேரியின் பிரதிச் செயலாளின் கணக்கிற்கு இலத்திரனியல் முறையில் கிடைக்கப்பெற்றது. மேலும், 5,018.2 பில்லியன் கொடுப்பனவுகளில 97.2 சதவீதம் (4880.2 பில்லியன்) காசோலைகளைப் பயன்படுத்தாது மத்திய வங்கி, இலங்கை வங்கி, மக்கள் வங்கி என்பவற்றின் ஊடாகச்ழ செலுத்தப்பட்டுள்ளன. இப்பெறுவனவுகளும் கொடுப்பனவுகளும் 5852 உட்செலுத்தல் வவுச்சர்கள் மூலமும் 17790 கொடுப்பனவு வவுச்சர்கள் மூலமும் மேற்கொள்ளப்பட்டன. இவை தவிர வங்கிகளுககு இடையிலான 908.2 பில்லியன் ரூபா பெறுமதியான 354 வங்கிப் பரிமாற்றங்கள் அதே நேர மொத்த உள்ளீட்டுத் தீர்ப்பனவு (Real Time Gross entry Settlement -RTGS) முறையின் ஊடாக மேற்கொள்ளப்பட்டன.